# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

---

*(2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002. ஒற்றோபர் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.75 | தபாற் செலவு : ரூபா 4.50

## 2002 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ.– ஓ. 39/99

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

சுருக்கப் பெயர்.

1\. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2\. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இருப்பாட்சி கொண்டுள்ளவரால் அத்தகைய கட்டடத்தில் குடியிருப்பு சட்டமுறையாக முடிவுறுத்தப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காணிச் சொந்தக்காரரால் அத்தகைய கட்டடத்தில் குடியிருப்பு சட்டமுறையாக முடிவுறுத்தப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3\. முதன்மைச் சட்டவாக்கத்தில் 82 ஆம் பிரிவு "அதிகாரசபையின் ஏதேனும் ஆதனமும், தொழிலும் ஏதேனும் செயற்பாடும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதிகாரசபையின் ஏதேனும் ஆதனமும், தொழிலும் ஏதேனும் செயற்பாடும் அல்லது அத்தகைய ஆதனம், தொழில் அல்லது செயற்பாடு தொடர்பான ஏதேனும் சட்ட நடவடிக்கை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணையைத் திருத்துதல்.

4\. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணையானது "1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டம்." என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னர் "1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டம்." என்னும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

5\. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.